ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பல்வேறு ஊராட்சி மக்களின் கோரிக்கையை ஏற்று

பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தர வேண்டும்!

சட்டப் பேரவையில் அ.செ.வில்வநாதன் கோரிக்கை!

சென்னை, ஜூன் 28- சட்டப் பேரவையில் வேளாண்மை, உழவர் நலத்துறை - கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பால்வளம் ஆகிய துறைகள் குறித்த மானியக் கோரிக்கையில் ஆம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் பேசுகையில் ஆம்பூர் தொகுதிக் குட்பட்ட பல்வேறு ஊராட்சி மக்களின் கோரிக்கையினை ஏற்று பாப்பனாபல்லி முதல் செங்கிலி குப்பம் வரை பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தர வேண்டுமாய் கோரிக்கை வைத்தார்.

இதுகுறித்து சட்டப் பேரவையில் ஆம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் பேசியது வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம் மற்றும் பால் வளம் ஆகிய துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவு பெற்று, 101வது பிறந்த நாள் காணும் இத்திங்களில், இப்பேரவையில் உரையாற்ற எனக்கு வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன்.

திராவிட மாடல் ஆட்சியின்மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். இந்த நல்லாட்சிக்கு உதாரணம் 40/40 வெற்றியே சாட்சி. 40 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு, வெற்றி தேடித் தந்த கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி அவர்களை வணங்குகின்றேன். கழகப் பொதுச் செயலாளர் அவை முன்னவர் அவர்களை வணங்குகின்றேன். முதன்மைச் செயலாளர் அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். திருப்பத்தூர் மாவட்டம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி

பெற உழைத்து வரும் திருப்பத்தூர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். அனைத்து அமைச்சர் பெருமக்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

நாடு விடுதலை பெற்ற நாளை 'கணக்குத் தீர்த்த நாள்' என்றும், அந்த விடுதலைக்காக ஆண்டுதோறும் விழா எடுத்துக் கொண்டாடும் நாளை 'கணக்குப் பார்க்கும் நாள்' என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை நெஞ்சிலே நிறுத்தி, அன்றாடம் பணி புரிந்துவரும் திராவிட மாடல் ஆட்சி ஆறாவது முறையாக கடந்த 2021 ஆம் ஆண்டு மே திங்களில் பொறுப்பேற்று, கடந்த மூன்றாண்டு காலமாக 'மக்கள் பணியே மகேசன் பணி' என்ற உணர்வோடு விடிகின்ற ஒவ்வொரு நாளிலும் மக்களுக்காக இன்று என்ன செய்யலாம்; என்ன திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற எதிர்பார்ப்போடு அதிகாரிகளோடு விவாதித்து, சாதனைகளையும், திட்டங்களை யும் ஆற்றி வருவதை தமிழ் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. (குறள்)

முறையாக நிதியாதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்து திட்டமிடு வது தான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும் என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, அந்நாளில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்க இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளுக்குத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்நாளில் 10 ஆண்டுகளாக காத்திருந்த விவசாயிகளுக்கு 2 இலட்சம் இலவச மின்னிணைப்பை வழங்கி, அவர்களின் வாழ்வில் விளக்கேற்றி வைத்தவர் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் நம் முதல்வர் அவர்கள்.

கடந்த மூன்றாண்டுகளில் வேளாண் துறைக்கு செய்த நன்மைகள்!

திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இந்தியாவிலேயே முதன்முறையாக வேளாண் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கையைத் தந்தவர் நம் முதல்வர் அவர்கள். 24 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகையாக ரூ.4,366 கோடியையும், மழை மற்றும் வறட்சிக் காலங்களில் பாதிக்கப்பட்ட 12.88 இலட்சம் ஏக்கர் விளைநிலங்களுக்காக 8 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.582 கோடியையும் தந்தவர் நம் முதல்வர் அவர்கள்.

கரும்பு சாகுபடியைப் பொறுத்தவரையில், அது 95 ஆயிரம் ஹெக்டரிலிருந்து 1,54,000 ஹெக்டேராக உயர்வு; 4,40,475 விவசாயிகளுக்கு கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக ரூ.651 கோடியையும்; 71 விவசாயிகளுக்கு கரும்பு அறுவடை இயந்திரங்களுக்கான மானியத்தையும் தந்தவர் நம் முதல்வர் அவர்கள். மேலும், கடந்த மூன்றாண்டுகளில் 2,163 டிராக்டர்கள், 9,303 பவர் டிரில்லர்கள், 288 அறுவடை இயந்திரங்கள், 2,868 பிற விவசாய இயந்திரங்கள் ரூ.270 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.56.97 கோடியில் 1,226 கிணறுகள் மற்றும் மின் சார/சூரிய சக்தி பம்ப் செட்டுகள் 100 சதவிகித மானியத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட விவசாயிகளுக்கு முதன்முதலாக 100 சதவிகித மானியத்தில் நுண்ணீர் பாசன வசதி ரூ.56 கோடியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 10 உழவர் சந்தைகளும், ஆண்டுதோறும் 3,000 மாணாக்கர்கள் கல்வி பயில 3 வேளாண் கல்லூரிகளும், 1 தோட்டக் கலைக் கல்லூரியும் துவக்கப்பட்டுள்ளன. இது

போன்ற சாதனைகளைத் தொடர என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் என் மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த வேளாண்மை மையம்!

ஆம்பூர் தொகுதி, மாதனூர் வட்டத்தில் என்னுடைய கோரிக்கையினை யேற்று புதிய ஒருங்கிணைந்த வேளாண்மை மையம் ரூ.250 இலட்சத்தில் கட்டித் தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் கதவாளம், பெரியாங்குப்பம் பகுதியில் இரண்டு checkdamகள் அமைக்க இந்த நிதி யாண்டில் நம்முடைய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் நிதியொதுக்கி தந்தமைக்கு பொது மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கலந்த வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அரங்கல்துருகம் ஊராட்சியில் ஏற்கெனவே கட்டப்பட்ட பொன்னபல்லி check dam பெருமழை காரணமாக அடித்துச் செல்லப்பட்டது. எனவே, விவசாய மக்கள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி புதியதாக checkdam அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூர் நகரத்தில் வண்ணாந்துறை காணாறு உள்ளது. இதில் பெருமழை பெய்யும்பொழுதெல்லாம் ஆம்பூர் நகரின் மையப் பகுதியில் நகரின் உள்ளே, முழுவதும் தண்ணீர் வருவதால், வீடுகள் சேதமடைகின்றன. பள்ளிக் கட்டடங்கள் சேதமடைந்து நீர் தேங்கி விடுகிறது. மாணவர்கள் பாதிக்கின்றனர். எனவே, கால்வாயின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தார்ச் சாலை அமைத்துத் தாரீர்!

மாதனூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனேரி முதல் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், ஆசனாம்பட்டு வரை ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியை ஒருங்கிணைக்க வனத் துறை அனுமதி பெற்று, நாயக்கனேரி முதல் ஆசனாம்பட்டு வரை 7 கிலோ மீட்டர் தொலைவிற்கு தார்ச் சாலை அமைத்தால் 50 கிலோ மீட்டர் தூரம் குறையும். மேலும், ஏறக்குறைய 10 ஊராட்சிகளை சேர்ந்த 50 ஆயிரம் பொது மக்கள் பயனடைவர்.

மாதனூர் ஊராட்சி ஒன்றியம், குமாரமங்கலம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க கடந்த நிதியாண்டில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. எனவே, அதனை உடனடியாக அமைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ரயில்வே மேம்பாலம் கட்டித் தாரீர்!

ஆம்பூர் நகர மக்களின் பல வருடக் கோரிக்கையான ரெட்டிதோப்பு பகுதியில் ரயில்வே மேம்பாலம் அமைத்துத் தருவதால், அப்பகுதியில் வாழும் பலதரப்பட்ட பொது மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியால், ரயில்வே மற்றும் வனத் துறை அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, முதலமைச்சர் அவர்களின் தேர்தல் வாக்குறுதியான ரெட்டிதோப்பு ரயில்வே மேம்பாலத் தினை இந்தநிதியாண்டிலே நிதி யொதுக்கீடு செய்து செயல்படுத்த முதலமைச்சர் அவர்களையும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

திருப்பத்தூர் மாவட்ட எல்லையான மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய நெடுஞ்சாலையினையொட்டி இடம் உள்ளது. எனவே, அவ்விடத்தில் விருந்தினர் மாளிகையினை, நெடுஞ்சாலை துறை அல்லது பொதுப் பணித் துறையின் சார்பில் கட்டித் தரக் கோருகின்றேன்.

பயண தூரம் குறையும்!

மாதனூர் ஊராட்சி ஒன்றியம், அரங்கல்துருகம் ஊராட்சி, சுட்டகுண்டா பகுதியில் இருந்து ஆந்திர மாநில எல்லையான பெத்தூர் வரை 11 கிலோ மீட்டர் வனத் துறை பகுதியில் military சாலை உள்ளது. இதில் ஆந்திர வனத்துறைக்குச் சொந்தமான சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள சாலையை தார்ச்சாலையாக அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஆந்திர அரசு அறிவித்துள்ளது. எனவே, நமது தமிழ்நாட்டிற்கு சொந்தமான திருப்பத்தூர் மாவட்டம், சுட்டகுண்டா பகுதியிலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் சாலை உள்ளது. எனவே, நம் அரசு இந்தச் சாலைக்கு வனத் துறை அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலத்திற்கு இணைப்பு சாலையாக அமைவதால், இதன்மூலம் பொது மக்கள் ஆந்திராவிற்கு செல்லும் பயண நேரம் குறையும். அதுமட்டுமல்லாமல், குப்பம் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு மக்கள் செல்ல வசதியாகவும் இருப்பதால், திருப்பத்தூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் தார்ச்சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இதனால் சுமார் 50 கிலோ மீட்டர் பயண தூரம் குறையும்.

வெள்ளக்கல் பகுதியில் தடுப்பணை!

மாதனூர் ஊராட்சி ஒன்றியம், விண்ணமங்கலம் ஊராட்சி, வெள்ளக்கல் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் அப்போதைய பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களால் 1997-1998ல் நீர்த்தேக்கத் தடுப்பணை கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தத் தடுப்பணையைக் கட்டினால், 15 கிராம மக்கள் மற்றும் ஆம்பூர் நகர மக்கள் அனைவருக்கும் குடிநீர் கிடைக்க ஏதுவாக இருக்கும். எனவே, இந்தத் தடுப்பணையை வெள்ளக்கல் பகுதியில் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூர் சட்டமன்ற தொகுதி, குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், அகரம்சேரி வலத்தூர் இடையே பாலாற்றின் குறுக்கே மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மேம்பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மழைக்காலங்களில் வெள்ள நீர் இவ்வாற்றில் செல்வதால், பொது மக்கள் வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அரசு மருத்துவமனை, நீதிமன்றம், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்கள் சுமார் 40 கிலோ மீட்டர் பயணம் தூரம் செல்வது குறையும் என்பதைக் குறிப்பிடுகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில், மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடசேரி, பாப்பனப்பள்ளி, வடகரை, மேல்சாணங்குப்பம், சின்ன பள்ளிக்குப்பம் ஆகிய பகுதிகளில் உவர்ப்பு நீராக உள்ள காரணத்தினால், முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்ததின்பேரில் ரூ.4.95 கோடி மதிப்பீட்டில் ஒகேனக்கல் வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க அரசாணை பிறப்பித்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் சிறப்பு செயல்திட்டத் துறை அமைச்சர் மற்றும் இம்மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்து, அப்பகுதி மக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்துக!

மேலும், ஆம்பூர் தொகுதியில் மீதமுள்ள ஊராட்சிகளுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை விரிவுப்படுத்தி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஆம்பூர் பேருந்து நிலையம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது. இப்போது பேருந்து நிலையம் பழுதடைந்தும், மழை வரும்போது concreteல் மழைநீர் கசிவதால், பயணிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, ஆம்பூர் நகரத்தில் நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெல்திகிமாணிபென்டா ஊராட்சியில் இருந்து பாஸ்மான்பென்டா கிராமத்திற்கு நகர பேருந்து செல்ல வேண்டுமானால். . . (மணியடிக்கப்பெற்றது)

அ.செ. வில்வநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி செல்லும் மாணவர்கள் மற்றும் விவசாயிகள் விவசாய விளைப்பொருட்களை எடுத்துக் கொண்டு வாணியம்பாடி நகருக்குத்தான் வர வேண்டும். எனவே, ஆந்திர மாநில அரசு அனுமதி பெற்று ஏற்கெனவே வெல்திகிமாணிபென்டா வரை செல்லும் நகர மினி பேருந்தை பாஸ்மான் பென்டா வரை செல்ல நீடித்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியம், ஆசனாம்பட்டு உயர்நிலைப்பள்ளி, ஆம்பூர் நகரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த கோருகிறேன்.

ஆம்பூர் நகரத்தில் உள்ள நாகநாத சுவாமி திருக்கோயில், ஆஞ்சிநேயர் திருக்கோயில், துத்திபட்டு பிந்து மாதவர் ஆகிய கோயில்களை புனரமைப்பு செய்து குடமுழுக்கு செய்துதர கேட்டுக் கொள்கின்றேன். மாதனூர் ஊராட்சி ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சி, கீழ் மிட்டாளம் புது மனை பகுதியில் ஆதி திராவிட மக்கள் நலன் கருதி இந்த நிதி ஆண்டில் சமுதாயக் கூடம் கட்டிதர கேட்டுக்கொள்கின்றேன். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மூடு விழா கண்ட ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையினை மீண்டும் இயக்க முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாதனூர் ஊராட்சி ஒன்றியம், பாப்பனாபல்லி முதல் செங்கிலிகுப்பம் வரை பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். பாலாறு பள்ளமாக உள்ளதால், விண்ணமங்கலம் ஏரி மற்றும் மின்னூர் ஏரிகளுக்கு தண்ணீர் வருவதில்லை. இந்தப் பகுதியை சுற்றியுள்ள பல்வேறு ஊராட்சி மக்கள் தடுப்பணை கட்டித் தருமாறு கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, இந்த தடுப்பணையை கட்டி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, உரையினை நிறைவு செய்கின்றேன்.

இவ்வாறு அ.செ.வில்வநாதன் பேசினார்.

ஒட்டப் பிடாரத்தில்

வட்டாரக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

சட்டப் பேரவையில் எம்.சி.சண்முகையா கேள்வி!

சென்னை, ஜூன் 28 - தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி கல்வி மாவட்டத்திலுள்ள ஒட்டப் பிடாரம் வட்டாரக் கல்வி கட்டடம் கட்ட அரசு முன் வருமா என ஒட்டப் பிடாரம் தொகுதி உறுப்பினர் எம்.சி.சண்முகையா சட்டப் பேரவையில் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து எம்.சி.சண்முகையா எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் அளித்த பதிலும் வருமாறு:

எம்.சி.சண்முகையா : (அ) ஒட்டப்பிடாரத்தில் வட்டாரக் கல்வி அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா? (ஆ) ஆம் எனில், எப்போது?

அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களுடைய அனுமதியோடு விடை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கல்வி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் வட்டாரக் கல்வி அலுவலகக் கட்டடம் தற்போது ஒட்டப்பிடாரம் வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. ஒட்டப்பிடாரம் வட்டாரக் கல்வி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்.சி. சண்முகையா: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் 139 அரசுப் பள்ளிகளும், அரசு உதவிபெறும் பள்ளிகளும் உள்ளன. ஒட்டப்பிடாரத்தில் வட்டாரக் கல்வி அலுவலகத்திற்கு கட்டடம் இல்லாததால் தற்போது வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளி கட்டடத்தில் இயங்கி வருகிறது. அமைச்சர் அவர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் கூறியுள்ளார்கள். மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கருங்குளம் ஒன்றியத்தில் சவலாப்பேரி அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 3 கட்டடங்கள் மட்டுமே உள்ளதால், போதுமான கட்டட வசதி இல்லாத காரணத்தினால், மாணாக்கரின் நலன் கருதி தரைத்தளம், முதல் தளத்துடன்கூடிய 3 வகுப்பறை கட்டடம் 2 எண்ணமும், மாணவர், மாணவிகளுக்கு கழிப்பறை கட்டடங்களும் அமைத்துத்தருமாறு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களை அறியவிரும்புகிறேன்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா அவர்கள் மட்டுமல்ல, எங்கெங்கெல்லாம் கட்டடங்கள் கேட்கப்படுகின்றதோ, ஏற்கெனவே திங்கட்கிழமை என்னுடைய மானியக் கோரிக்கை இருக்கிறது. அதில் நான் பேசலாம் என்று இருந்தேன். இருந்தாலும் நம்முடைய பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்கின்ற வகையில் ஏறத்தாழ 7500 கோடி ரூபாயில் வருகின்ற ஆண்டுகளில் 16 ஆயிரம் வகுப்பறைகள் கட்டவேண்டுமென்று நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக அந்தவகையில் 2497 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3603 வகுப்பறைகள் கட்டப்பட்டிருக்கின்றது. அதைச்சார்ந்து சுற்றுச்சுவராக இருந்தாலும், கழிவறைகளாக இருந்தாலும், ஆய்வகங்களாக இருந்தாலும் இவையெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, மீண்டும் ஒரு 3601 வகுப்பறைகள் கட்டுகின்ற பணி மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டிலும் தனியாக ஒரு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தெந்த கேள்விகளை இதுசார்ந்து கேட்கிறார்களோ அவர்களுக்கு உடனடியாக அதைக் கட்டித் தருகின்ற பணியில் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்.சி. சண்முகையா: பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் வ.உ.சி. அரசு மேல்நிலைப் பள்ளியிலும், அதேபோன்று செக்காரக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியிலும், அதேமாதிரி தரவைக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் புதியதாக கட்டடங்களை அமைத்துக்கொடுக்குமாறு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: ஏற்கெனவே சொன்ன பதில்தான் பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அது கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளித்தார்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில்

அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் பிரச்சாரம்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் வீடு வீடாகச் சென்று தீவிர வாக்குச் சேகரித்தார்!

விழுப்புரம் ஜூன் 28- விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத் தேர்தல் அடுத்த மாதம் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் திமுகவினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதையடுத்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க.வினர், செ.புதூர், செ.கொளப்பாக்கம் கிராமங்களில் உள்ளமந்தவெளி, விநாயகர் கோவில், முருகர் கோவில், மாரியம்மன் கோவில் தெரு ,மாதா கோவில் சாலையில் இன்று மாலையில் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களை சந்தித்துஉதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான்

பேருந்தில் மகளிர்களுக்கு கட்டணமில்லா பயணம்,

இரண்டு லட்சம் விவசாயிகளுக்குஇலவச மின் இணைப்பு வசதி,

மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வித் திட்டம்,

மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடன் தள்ளுபடி,பொருளாதாரத்தை மேம்படுத்த மகளிருக்கு கடன் உதவிகள்,

நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் உயர் கல்வி படிக்கும் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய்,

குடும்பப் பெண்களுக்கு உரிமை தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் என முதலமைச்சர் செய்துள்ள பல்வேறு திட்டங்களை அமைச்சர் செஞ்சி மஸ்தான் எடுத்துரைத்தார்.

மேலும் இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துவதற்காக வாக்காளர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

வாக்கு சேகரிப்பின் போது விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட துணை செயலாளர்மரக்காணம் ரவிக்குமார், மாவட்டப் பொருளாளர் ரமணன், செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஒன்றிய செயலாளர்கள் வேம்பிரவி,நெடுஞ்செழியன், அண்ணாதுரை, ராஜாராமன், மணிமாறன், செழியன், பழனி, ரவிச்சந்திரன் பச்சையப்பன் விஜயராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன், செஞ்சி நகர செயலாளர் கார்த்திக், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், முட்டத்தூர் ஒன்றிய கவுன்சிலர் கபிலன், செ.புதூர் ஊராட்சி மன்ற தலைவர் அந்தோணி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழா தொடர் 101 நிகழ்ச்சியாக நடைபெற்று வருகிறது.அதன்படி நெல்லை 26 வது வட்டக் கழகச் செயலாளர் மாரிமுத்து ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று டவுன் ரயில்வே நிலையம் சாலையில் 101 மரக்கன்றுகள் நட்டு 101 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். நிகழ்வில் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், வட்டச் செயலாளர்கள் சடாமுனி,கேபிள் குமரேசன், அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணி ராஜ் மற்றும் கோபி, சரவணபிரபு, ராமலிங்கம், முருகன், ஈஸ்வரன் சங்கர் கணேஷ் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.